(T.V. செய்திகள்)

# ஆதரவற்ற நிலை



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே!

உங்களை திக்கற்றவர்களாக வீடேன் என்று வாக்குரைத்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்தி இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்கிறேன்.

அன்பானவர்களே! ஒருவர் ஒரு இல்லம் (Home) வைத்திருக்கிறார். எதற்கென்றால், செத்துக் கொண்டிருப்பவர்களுக்கென்று ஒரு ஆதரவு இல்லம். பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்கள் அல்லது பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டில் இருப்பார்கள். இங்கே பெற்றோர் மரிக்கும் நிலையில் இருப்பார்கள். இப்படி மரணத்தை நோக்கி போய்க்கொண்டிருப்பவர்களை தேடிக் கண்டுபிடித்து, அவர்களை கொண்டு வந்து, அவர்களுக்கு ஏதாவது நோய் இருந்தால் அதை சரி செய்ய மருந்து கொடுத்து, அவர்களிடம் அன்பு பாராட்டி, அவர்கள் சமாதானமாக மரிப்பதற்கு இவர் உதவி செய்கிறார். யாருக்கு இவர்கள் இப்படி செய்கிறார்கள் என்றால் எந்தவித ஆதரவும் அற்றவர்களுக்கு தான்.

ஆதரவற்ற நிலை என்பது எவ்வளவு கொடுமையானது தெரியுமா? இது எல்லோரும் புரிந்திருக்கிற, அனுபவித்திருக்கிற ஒரு வார்த்தை. நம் பிள்ளைகளை அன்பாக நேசித்து வளர்க்கிறோம். ஏதோ ஒரு சின்ன ஆதரவு பிள்ளையிடம் கேட்கும்போது, அது இல்லை என்று சொன்னால், அந்த சூழல் (ஆதரவற்ற நிலை) எப்படி கொடுமையானதாக இருக்கும் தெரியுமா?. இந்த ஆதரவற்ற நிலைமையைவிட, மகா பயங்கரமான ஆதரவற்ற நிலை என்று ஒன்று உள்ளதென்று உங்களுக்கு தெரியுமா? அது என்னவென்றால், ஒருவன் பாவியாக வாழ்ந்து, பாவியாகவே மரிக்கின்ற நிலை மகா பயங்கரமான, கொடுமையான ஆதரவற்ற நிலையாக இருக்கிறது. இதனை நாம் ஒவ்வொருவரும் யோசித்து பார்க்க வேண்டும். ஏனெனில், ஒரு பாவியினுடைய ஆதரவற்ற நிலையைப் போல் கொடுமையானது வேறொன்றும் இல்லை.

ஒரு பாவி என்பவன் ஆதரவற்ற நிலையில் இருக்கிறான் என்பதை எப்படி தெரிந்துக்கொள்ள முடியும்? எபே 2:12ல் “அக்காலத்தில் கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும்,

இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்". பாவி என்றால் பாவம் செய்தவன். பாவம் என்பது தேவனுடைய பிரமாணத்தை மீறுவது. நன்மை செய்ய அறிந்திருந்தும் செய்யாமல் போவது. சட்டத்தின்படி வாழாமல் இருப்பது போன்றவை. இவைகளை செய்கிறவன் பாவி என்று வேதாகமம் விளக்கம் கொடுக்கிறது.

தேவனால் படைக்கப்பட்ட நாம் இந்த உலகத்தில் பெரிய பெரிய படிப்புகளை எல்லாம் படித்து, டாக்டர், இஞ்சினியர் அப்படி இப்படி என்று பெருமை பாராட்டிக்கொண்டிருக்கிறோம். இவர்கள் பாடங்களில் என்ன படிக்கிறார்கள் என்றால், மனிதன் குரங்கிலிருந்து வந்தான்; அதனை எப்படி ஏற்றுக்கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. நம்மை மட்டமாக பேசுகிறது டார்வின் தியரி ஆப் எவலூசன் நாம் குரங்கிலிருந்து வந்தவர்கள் என்று. இதனை படித்து அதில் பட்டம் வாங்குகிறார்கள். ஆனால், வேதம் சொல்கிறது மனிதனை தேவன் தேவ சாயலாக படைத்தார். மண்ணினால் ஒரு உருவத்தை செய்து, அந்த உருவத்தின் நாசியில் தன்னுடைய சுவாசத்தை ஊதினார் மனிதன் ஜீவாத்துமாவானான். தேவனுக்கும் நமக்கும் தகப்பன் பிள்ளைகள் என்ற உறவு இருக்கிறது என்று பைபிள் சொல்கிறது. மனிதர்களோ நாம் குரங்கிலிருந்து வந்தவர்கள் என்று சொல்கிறார்கள்.

தேவனால் படைக்கப்பட்ட மனிதன் தேவனுடைய வார்த்தையை மீறி நடந்து, பாவம் செய்ததினால் பாவியாகிறான். தேவன் சொன்னதை மீறி நடக்கிற யாவரும் பாவம்செய்து, தேவனை விட்டு விலகிப்போகிறார்கள். பாவம் என்பது தலைமுறை தலைமுறையாக தொற்றிக்கொண்டு வருவதல்ல. ஜென்ம பாவம் என்று சொல்கிறார்கள். அப்பா அம்மா செய்தவை பிள்ளைகளுக்கு வரும் என்று சொல்கின்றனர். ஆனால், வேதாகமம் 'அவரவர் செய்த பாவத்தினால் அவரவர் பாவியாகிறார்; அவரவர் செய்ததற்கு தான் நியாயத்தீர்ப்பு; அவரவர் செய்ததை தான் தேவன் கேள்வி கேட்பார்' என்று சொல்லுகின்றது.

மனிதன், பாவம் செய்ததினால் தேவனை விட்டுப்பிரிந்து போகிறான். ஏதேன் தோட்டத்திலே தேவன், ஆதாம், ஏவாள் மூவரும் ஒன்றாக இருந்தார்கள். தேவன் 'செய்யாதே' என்று சொன்னதை மனிதன் செய்துவிட்டான். தேவன் அவனை தேடி வந்து 'எங்கே இருக்கிறாய்?' என்று கேட்டார். அவனோ நான் ஒளிந்துக்கொண்டிருக்கிறேன் என்றான். பாவம் செய்தவனை தேவன் விலகிப்போ என்று சொல்லத் தேவையில்லை. பாவம் செய்தவன் தானாகவே தேவனை விட்டு விலகிப்போய் விடுகிறான். அப்பொழுது, அவனுக்கு தேவனுடைய ஆதரவில்லை.

நமது பிள்ளைகள் எல்லோரும் செல்போனில் பேசுவதை

பார்த்திருக்கிறீர்களா? நண்பர்களோடே உட்கார்ந்து பேசுவதை கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் நல்லதை பேசினால் நம்முடன் உட்கார்ந்து பேசுவார்கள்; அவர்கள் பேசுவது நல்லது இல்லை என்பதனால் தான் தனியே போய் பேசுகிறார்கள். உண்மைக்காரணம் புரிகின்றதா? மனிதன் பாவம் செய்ததினாலே தேவனை விட்டு விலகிப்போகிறான். நமக்கு ஏதாவது ஒரு ஆதரவு வேண்டுமல்லவா? அன்று ஏவாளிடம் புதிதாக ஒருவன் வந்து நீங்கள் சாகமாட்டீர்கள், தேவன் சொன்ன மாதிரி நடக்காது, நான் இருக்கிறேன், தைரியமாக செய் என்று ஊக்கப்படுத்தினான் அல்லவா. இன்றைக்கும் அப்படித்தான் பிசாசானவன் 'அதெல்லாம் ஒன்றும் நடக்காது', 'நீ நன்றாக இருப்பாய்', 'நியாயத்தீர்ப்பாம், நரகமாம், பரலோகமாம், எல்லாம் ஒன்றுமில்லை' என்று சொல்லி நம்மை தேவனிடமிருந்து பிரித்துக் கொண்டுப்போகிறான்.

தேவனுடைய ஆதரவில்லாத நிலை என்பது என்னவென்றால் நாம் அந்நியரும், வாக்குத்தத்தம் இல்லாதவர்களும், நம்பிக்கை இல்லாதவர்களும், தேவனற்றவர்களுமாக மாறிவிடுவது தான். பாவத்தின் ஆதரவற்ற இந்த நிலையில் நாம் கிறிஸ்துவினிடத்தில் வருகிறோம். கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய எல்லா பாவங்களையும் மன்னித்து, திருமுழுக்கிலே கழுவி நம்மை சுத்திகரித்து, நம்மை பரிசுத்தமாக்கி மீண்டும் தேவனுடன் இணைக்கிறது. மேலும், நாம் திருமுழுக்கிலே கிறிஸ்துவை தரித்துக்கொள்கிறோம், கலாத்தியர் 3:27, ''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே''. அப்படியானால், மீண்டும் நமக்கு ஒரு ஆதரவு கிடைத்துவிடுகின்றது. நாம் கிறிஸ்துவிற்குள் வாழ்கின்ற கிருபை கிடைக்கிறது. திருமுழுக்கு தேவையில்லை, நான் எடுக்கமாட்டேன் என்பவர்கள் இன்னும் பாவத்திலேயே தேவனுடைய ஆதரவில்லாமல் பிசாசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள்.

ரோமர் 5:6 ''அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்''. இயேசு உன்னுடைய பாவத்திற்காக மரித்தார் என்று சொன்னால், 'நீ யார் என்னை பாவி என்று சொல்வது. உன் வேலையை பார்த்துக்கொண்டு போ' என்று சொல்லுகிறோமா? ஒரு




நீங்கள் எவ்வாறு இருக்கிறீர்களோ, அவ்வாறே தேவன் உங்களை நேசிக்கிறார். ஆனால் உங்களை அப்படியே விட்டுவிட மறுக்கிறார். நீங்கள் இயேசுவைப் போலவே இருக்க விரும்புகிறார்.

- Max Lucado

விஷயத்தை தயவு செய்து யோசித்துப் பாருங்கள். நீங்களும் நானும் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நம் பாவத்திலிருந்து நமக்கு மன்னிப்பு கொடுக்க, பாவத்தினால் நாம் ஆதரவற்ற நிலைக்கு சென்றுவிடாமலிருக்க, தேவனை விட்டு பிரிந்து போய்விடாமலிருக்க கிறிஸ்து குறித்த காலத்தில் நமக்காக மரித்தார்.

கிறிஸ்து எனக்காக மரித்தார் என்ற உணர்வில்லாமல், தேவனற்று ஆதரவின்றி வாழ்கின்ற வாழ்க்கை ஒரு பாவியினுடைய நிலையாகும். ரோமர் 1:21 "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியா மலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது''. தேவனுடைய மன்னிப்பை பெறாத யாவரும், பாவி என்னும் ஆதரவற்ற நிலையில் இருக்கிறோம். பெற்றோரிடமோ, நண்பர்களிடமோ கோபித்துக்கொண்டிருக்கிறோம்; பின்பு, மன்னிப்பு கேட்டால் சமாதானமாகி ஒன்றாக இருக்கலாம் அல்லவா!

எபே 2:12 "அக்காலத்தில் கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு, அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்". நம்மை தற்கொலை பண்ண எது தூண்டுகிறது? திருப்தியற்ற நிலை, வெறுப்பு ஏன் வருகிறது? மன அழுத்தம் ஏன்? மனோரீதியாக ஏன் பாதிக்கப்படுகிறோம்? நம்பிக்கை இழப்பதினாலே! நம்பிக்கை தான் வாழ்க்கை என்று எல்லோரும் பேசுகிறோம். எதை நம்புவது? ஏதாவது ஒன்று இருக்க வேண்டும் அல்லவா? அந்த ஒன்றுதான் தேவனும், அவருடைய வார்த்தையுமாய் இருக்கிறது. ஏனென்றால், தேவன் உயிருள்ளவர். எல்லா வல்லமையும் உடையவர். அந்த தேவன் மேல் நம்பிக்கை இழக்க வைப்பது பாவம். பாவத்தை விட்டு வெளியே வந்தோம் என்றால், நாம் அந்த தேவன் மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் வாழமுடியும். ஆகையினால், நாம் ஞானமுள்ளவர்களாய் இருக்க, கடந்த கால பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று வாயினாலே அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற்று, தேவனால் அவருடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே நாம் சேர்க்கப்பட்டு, தேவனுடைய ஆதரவுள்ளவர்களாக வாழ்வோம். தேவன் தாமே அதற்கு நமக்கு, ஞானமும் கிருபையும் தந்தருளுவாராக!.



# நித்திய பலி

**Eternal Sacrifice**

## ஆவிக்குரிய உலகிலும் தேவன் ஆளுகை செய்கிறார்



BETTY CHOATE

நாம் கண்ணால் காணமுடியாத ஆவிக்குரிய உலகிலும் தேவ ஆளுகை இருக்கிறது.

**தேவதூதர்களின் சேனையைக் குறித்து வேதம் கீழ்க் கண்டவாறு கூறியுள்ளது.**

''பின்னும் நான் பார்த்தபோது சிங்காசனத்தையும், ஜீவன்களையும், மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம், பதினாயிரமாகவும் ஆயிரமாயிரமாகவும் இருந்தது'' (வெளிப்படுத்தின விசேஷம் 5:11)

இதேபோல் கீழ்ப்படியாத தேவதூதர்களைப் பற்றியும் 2 பேதுருவில் கூறப்பட்டுள்ளதைப் பார்ப்போம்.

பாவம் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்தில் தள்ளி நியாயத் தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து; என்று (2 பேதுரு 2:4) கூறுகிறது.

நமது ஆண்டவராகிய கிறிஸ்து, மரணத்திற்குப் பின்பு வரும் வாழ்வு குறித்தும், நிலை குறித்தும் ஓர் பட விளக்கம்போல் லூக்காவில் கூறுகிறார். (லாசரு, ஐசுவரியவான் உதாரணத்திலிருந்து) ''அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்".

மேலும், "அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும் பலி பீடத்தின் கீழே கண்டேன். அவர்கள் பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிற வர்களிடத்தில் எங்கள் இரத்தத்தை குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும்

இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்; அப்பொழுது, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும் அவர்கள் தங்களைப் போலக் கொலை செய்யப்பட போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னும் கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது". (வெளிப்படுத்தின விசேஷம் 6:9-11)

மேலும் வெளிப்படுத்தின விசேஷம் 7:9 ஆம் வசனம் கீழ்க்காணும் விதமாகக் கூறுகிறது. "இவைகளுக்குப் பின் நான் பார்த்தபோது இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்".

**உலகில் இரண்டு ராஜ்யங்கள்**

இப் பிரபஞ்சத்தில் இருவேறு ராஜ்யங்கள் உள்ளன. இவை தேவனுடைய சகிப்புத் தன்மையினாலும் , மனிதனுக்கு அவர் தந்த சுயாதீன சுதந்திரத்தினாலும் உண்டாயின.

அவைகளில் ஒன்று சாத்தானுடைய ராஜ்யம். கலகம் செய்த ஆவிகளின் காலம் தொடங்கி, பின்னர் ஆதாம் ஏவாள் நீதிக்குத் தலை வணங்குவதற்குப் பதிலாக கீழ்ப்படியாமையைத் தெரிந்து கொண்டது வரையிலுமானது. இந்த ராஜ்யத்தில் விழுந்துபோன தூதர்கள், கீழ்ப்படியாமல் மரித்துபோன மக்கள், கீழ்ப்படியாமல் உயிர்வாழும் மக்கள் என்று அனைவரும் அடங்குவர்.

மற்றொரு ராஜ்யம் கடவுளுக்குரியது. இதில் கடவுளின் பாதத்தில் ஆராதனை செய்கிறவர்களும், அவரது ஏவல்களைச் செய்கிறதுமான தேவதூதர்களும், மரித்த நீதிமான்களும், உயிருடன் வாழும் நீதிமான்களும் அடங்குவர்.

இந்த ராஜ்யத்தில் ஆபிரகாம் இருந்தார். இன்றும் வாழ்கிறார். ஏனோக்கு, எலியா, தானியேல் ஆகியோர்களும் கூட இருக்கிறார்கள்.

கிறிஸ்து தமது சபையின் மூலம் இந்தக் கர்த்தருக்குரிய ராஜ்யத்தைச் செழிக்கச்



ஒருவருக்கொருவர் அன்பு கூறுங்கள் என்றுதான் இயேசு கூறினார். முழு உலகையும் நேசியுங்கள் என்று அவர் கூறவில்லை

- Mother Terasa

செய்வதற்காக மாம்சத்தில் பிறந்து வந்தார். இந்தக் குடும்பத்தில் நாம் பிறக்கும் போது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறோம். நாம் அந்தகார உலகிலிருந்து ஒளியின் ராஜ்யத்துக்குள் வந்து வாழ்ந்து வருகிறோம். அந்த ராஜ்யம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜியத்திற்கு உட்படுத்தினார். அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் (கொலோசெயர் 1:13,18)

“கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்” ரோமர் 16:16 இவ்வுலக வாழ்வை முடித்தபின் நமது ஆவி, ஆவியுலக ராஜ்யத்தை அடைகிறது.

கிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கி சிலுவையின் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்திய காரணத்தினால், தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் ஆகிய அனைவரின் முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக ‘இயேசுவே கிறிஸ்து’ என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு கொடுத்தார்.

தெய்வத்துவத்தில் ஒருவராகிய வார்த்தையானவர், ஆதிமுதல் ஆளுகை செய்கிறார். அவர் தம்மை வெறுமையாக்கினதினாலும், தேவனுக்கே உரியதான அதிகாரங்களை விட்டு விட்டபடியினாலும், மாம்சத்தில் பிறந்து தம்மை ஒடுக்கிக் கொண்டதினாலும், மனிதர்களுக்காக தாமே பாவமாகியதினாலும், மரணபரியந்தம் தம்மை தாழ்த்தியதினாலும் கர்த்தரால் மேன்மைப்படுத்தப்பட்டார். எல்லா நாமத்திற்கும் மேலான இயேசு என்ற திரு நாமத்திற்கு முன்பு எல்லா முழங்கால்களும் ஒரு நாள் முடங்கும்.

அவர் மரணத்தை மேற்கொண்டு தாம் ஆதிமுதல் கொண்டிருந்த தமது மகிமையான நிலைக்குள் பிரவேசித்தார். மீண்டும் அந்த உரிமைகளையும், குணப்பண்புகளையும் திரும்பப் பெற உரிமை கொண்டாடுவதில்லை. பதிலாக,



நாம் அந்தகார உலகிலிருந்து ஒளியின் ராஜ்யத்துக்குள் வந்து வாழ்ந்து வருகிறோம். அந்த ராஜ்யம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.

கர்த்தரே அந்த மகிமைகளைக் கொடுப்பதால் நாம் மகிமைப்படுகிறோம். தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்28:18)

கர்த்தர் அதைத் தருகிறார். அவர் ராஜாதிராஜா. பிரபஞ்சம் முழுமைக்கும் அவர் ஆளுநர். காணும் உலகம், பரலோகம் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (தானியேல் 7:13,14)

அவரே ஆட்டுக்குட்டியானவர்; கர்த்தாதி கர்த்தரும் ராஜாதிராஜாவுமானவர் (வெளிப்படுத்தின விசேஷம் 17:14) அவரே இயேசுக்கிறிஸ்து. உலக அதிபதிகளுக்கு மன்னர், (வெளிப்படுத்தின விசேஷம் 1:5 ). அவர் ஆளுகிறவரானதால் அவரைப் பற்றி கீழ்க்குறித்த விவரம் சொல்லப்படுகிறது.

வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை தொடங்கி மறுமுனை மட்டும் நாலு திசைகளிலும் கூட்டிச் சேர்ப்பார்கள். வானத்திலும் பூமியிலும் உள்ளவர் யாவரும் அவரது ஆளுகைக்குட்பட்டவர்களே.

''சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது. '' (1கொரிந்தியர் 15:27)

கர்த்தரிடமிருந்து பெற்ற அதிகாரத்தினால் கிறிஸ்து ஆளுகை செய்கிறார்.

## இருதயத்தை காத்துக்கொள்!

ஸ்டீவ் இர்வின் (Crocodile Hunter) என்பவர், விஷம் நிறைந்த பாம்புகளையும் கொடிய முதலைகளையும் லாவகமாக பயமின்றி பிடிப்பதில் வல்லவர். இவரது திறமையை நீங்கள் Discovery, Animal Planet தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கக் கூடும். ஆனால், இவர் கடலில் உள்ள ஒரு அரிய வகை மீனை பிடிக்கும்போது, அந்த மீனின் வாலில் இருந்த கூர்மையான எலும்பு அவரது இருதயத்தை கீரியதால் இரத்தம் வெளியேறி உடனே இறந்தார்!

நீதி 4:23 – எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.

# பிதா, குமாரன், பரிசுத்த ஆவி

## பிதாவாகிய தேவன்

தொடர் பாடம்

பிதா என்னும் வார்த்தை ஆபிரகாமுக்கும் (யாக். 2:21), ஈசாக்குக்கும் (ரோம. 9:10), யாக்கோபுக்கும் (யாத். 3:6), தாவீதுக்கும் (லூக். 1:32) மற்றும் சிலருக்கும் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதால் பொதுவாக பிதா என்னும் வார்த்தை தகப்பன் என்கிற அர்த்தத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது. இது எல்லாருக்கும் தெளிவான வார்த்தையாய் இருக்கிறது. அப்படியே தேவன் என்கிற வார்த்தையும் வேதாகமத்தில் சிலருக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஆதி. 16:10-13 வரைக்கும் வாசிக்கும்போது, ஆபிரகாம் மனைவியாகிய சாரளைவிட்டு ஓடிப்போன அடிமைப்பெண்ணாகிய ஆகாருக்கு தேவதூதன் தரிசன மானான். ஆகார் தேவதூதனை நோக்கி: நீர் என்னைக் காண்கிற தேவன் என்றுச் சொன்னாள். மேலும் நியாயாதிபதி 13:21-22 ஆகிய வசனங்களை வாசிக்கும்போது, சிம்சோனின் தாய்தகப்பனுக்கு தேவதூதன் தரிசனமானான். அப்பொழுது அவர்கள் தாங்கள் தேவனைக் கண்டதாகப் பயந்தார்கள். மேலும் யாத். 20:1 ஐ வாசிக்கும்போது, தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன என்றும், மற்றும் அநேக இடங்களில் கர்த்தர் மோசேனய நோக்கி இதைச்சொன்னார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சீனாய் மலையிலே மற்றும் முட்செடியிலே மோசேக்குத் தரிசனமானது, மோசேயோடு பேசினது தேவதூதன் என்பதை ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார் (அப். 7:30,35,38). மேலும் நியாயப்பிரமாணம் தேவதூதரைக் கொண்டே மோசேயின் கையில் கொடுக்கப்பட்டது ( அப். 7:53, கலா. 3:19) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்கொண்ட வசனங்கள் மூலமாக ஆகாரோடு பேசின தூதன் தேவன் என்றும், மனோவாவோடு பேசின தூதன் தேவன் என்றும், சீனாய் மலையிலே மோசேயோட பேசின தூதன் தேவன் என்றும் சொல்லப்படுவதின் மூலம் தேவதூதர்கள் தேவன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியே மோசேயும் தேவன் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். கர்த்தர் மோசேயை நோக்கி, நீ ஆரோனுக்குத் தேவனாய் இருப்பாய், அவன் உனக்கு வாயாக இருப்பான் (யாத். 4:16),

என்றும், சொன்னார். மேலும், கர்த்தர் மோசேயை நோக்கி: எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு நான் உன்னை தேவனாக்கினேன் (யாத். 7:1) என்றும் சொன்னார். இங்கு மோசேக்கு 'தேவன்' என்ற வார்த்தை கர்த்தரால் பயன்படுத்தப்பட்டது. அப்படியே சாத்தானும் இவ்வுலகத்தின் தேவன் என்று சொல்லப்பட்டிருக்கிறான் (2கொரி. 4:4). மேலும் இயேசு வானவரும் தேவன் என்று சொல்லப்படுகிறார். அந்த வார்த்தை தேவனாயிருந்தது (யோவா. 1:1), தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் (1தீமோ. 3:16), அவர் சர்வத்துக்கும் மேலான தேவன் (ரோம. 9:5), அவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் (1 யோவா. 5:20), தேவன் சுய இரத்தத்தினாலே சபையை சம்பாதித்துக்கொண்டார் ( அப்.20:28), என்றும் இயேசுவைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் தேவனுடைய ஜனங்களும் தேவர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள் ( சங்.82:6 ). ஒருமுறை இயேசு யூதர்களோடு பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது, யூதர்கள் அவர்மேல் எறியும்படிக்கு கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி, அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன்; அதில் எதினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு யூதர்கள் நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை, நீ மனுஷனாயிருக்க உன்னைத் தேவன் என்றுச் சொல்லி, இவ்விதமாக தேவதூஷணம் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள். அப்பொழுது, இயேசு தன்னைத் தேவன் என்று சொல்லுவதில் தவறில்லை என்பதையும் தேவனுடைய ஜனங்கள் எல்லாரும் தேவர்களாயிருக்கிறார்கள் என்பதையும் விளக்கும்படி அவர்களை நோக்கி, தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா? தேவவசனத்தைப் பெற்றுக் கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க வேதவாக்கியமும் தவறாததாயிருக்கிறது ( யோவா.10:31–36) என்று சொன்னார். இங்கே தேவன், தேவர்கள் என்பதற்கு இயேசு கொடுக்கிற விளக்கம் என்னவென்றால் தேவவசனத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் ஒருமையிலே



எனக்கு உங்கள் கிறிஸ்துவைப் பிடிக்கும்,
ஆனால் உங்கள் கிறிஸ்தவர்களைப் பிடிக்காது.
உங்கள் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு நேர் மாறாக வாழ்கின்றனர்.
- Mahathma Gandhi

இருக்கும்போது, தேவன் என்றும் பன்மையிலே இருக்கும்போது தேவர்கள் என்று சொல்லப்படுவதாகும். தேவதூதன் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு அல்லது குறிப்பிட்ட நபருக்கு தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டுவரும்போது தேவன் எனப்பட்டான். அப்படியே மோசேயும் பார்வோனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் கொடுக்கவேண்டிய தேவனுடைய வார்த்தைகளை தனிமையாய்ப் பெற்றுக் கொண்டபடியினால் தேவன் எனப்பட்டான். ஆனால் இயேசுவானவரோ சகல ஜாதிகளையும் தேவனுடைய பிள்ளைகளாக்கும்படி ஒருவராய் தேவனுடைய வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டபடியினால் (யோவா.8:28,12:49-50) சர்வத்துக்கும் மேலான தேவனாய் இருக்கிறார். மேலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது. (எபே.1:22).

மேற்கண்ட வசனங்களின் மூலமாக தேவன் என்கிற வார்த்தை அநேகருக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். ஆகையினால் இயேசுவானவரை தேவன் என்று சொல்லுவதினாலே தவறு ஏதுமில்லை. மேலும் இயேசுவானவர் தேவன் என்று சொல்லப்பட்டிருப்பதினால் அவருக்கும் மேலான தேவன் இல்லையென்றுச் சொல்லுவது சத்தியத்திற்கு விரோதமானதாகும். ஏனென்றால் வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் எனப்படுகிறவர்கள் உண்டு, இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர்மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். (1 கொரி.8:5-6 ). எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார்மேலும் எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபே.4:6).

**– தொடரும்**

**– சகோ. V. ஆசீர்வாதம் (திருவெற்றியூர்)**



**கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது...**

2 பேதுரு 3:10 – வானமும் பூமியும் அழியும்

யோ 5:28,29 – உயிர்தெழுதல் நடக்கும்

எபி 9:27 – நியாயத்தீர்ப்பு நடைபெறும்

மாற்கு 25 :46 – நித்தியம் துவங்கும்

## நித்தியமான பலியான இயேசு கிறிஸ்து

### Jesus Chirst, The Eternal Sacrifice

# ஆண்டவர் யார்?

என்னுடைய தாயும், தகப்பனும் நம்பினவைகளை நான் எப்பொழுதுமே சந்தேகித்ததோ, கேள்வி கேட்டதோ இல்லை. அவர்கள் கிறிஸ்தவர்கள்; மேலும் அவர்கள் எனக்கு கடவுளைப் பற்றி போதித்தனர்; மேலும் நான் பேசத்தொடங்கிய நாள் முதல் "இயேசு என்னை நேசிக்கிறார்".

ஆகையால், என்னுடைய நம்பிக்கையைக் குறித்த எந்தப் பிரச்சனையும் எனக்கு வரவில்லை. ஆம், அப்படித்தான் நான் நினைத்திருந்தேன். ஆனால் என்னுடைய பள்ளியில் பரிமாணத்தைப் (evolution) பற்றி நான் நிறைய காரியங்களைப் கற்றேன். ''இந்த அண்டசராசரம் (பூமி மற்றும் கோள்கள்) 120 முதல் 140 கோடி வருடங்கள் பழமையானது'', ''மிகவும் பழைய மனிதனின் எலும்புகள் 35 லட்சம் வருடங்களுக்கு முந்தயது'' மற்றும் "பழமையானது"

6 காலங்களில் முதல் காலமான 'கேம்பியரிக் காலம்' 55 கோடி வருடங்களுக்கு முன் தோன்றியது என்ற கூற்றுகளெல்லாம் எங்கள் அறிவியல் ஆசிரியர் அடிக்கடி கூறுவதாகும். மேலும் அவர்கள், குரங்குகளில் இருந்து மனிதனைப் போன்ற விலங்குகளாகவும், பின்பு இறுதியில் ஹோமினிட்ஸ் (hominids) எனும் குகை மனிதன் மற்றும் நவீன மனிதன் என்ற நிலையையும் அடைந்தனர், என்றும் கூறினர்.

பைபிள் இவைகளில் ஒன்றையும் பற்றி பேசுவதில்லை என்று எனக்குத் தெரியும்; ஆனால் இந்த கோட்பாடுகளை (theory) நான் கேள்வி கேட்கும்போது அவை வெற்றிபெறவில்லை. ''சில விஞ்ஞானிகள் தாங்கள் நினைப்பதைவிட இந்த உலகம் இளமையானது என கூறியதை நான் செய்தித்தாள்களில் படித்துள்ளேன்''; மேலும் "இப்பொழுது விண்வெளியில் (space) உள்ள புதிய தொலைநோக்கிக் கருவிகள் அனுப்பும் செய்திகள், ஏற்கனவே நம்முடன் உள்ள தகவல்களுடன் முரண்படுகின்றன''; மேலும் "பிக் பேங் (Big Bang) எனும் கோட்பாட்டை உறுதிசெய்வதற்கான பொருள் (matter) எங்கிருந்து வந்தது

என்பதற்கான விளக்கம் ஒருவரிடமும் இல்லை''. ஆனாலும், அநேக ஆசிரியர்கள், இப்புதிர்களுக்கான பதிலை பைபிளில் இருந்து பெற ஆர்வம் காட்டுவதில்லை. என்னைப் பொருத்தமட்டில், இந்த மில்லியன் மற்றும் பில்லியன் வருடங்களைப் பற்றி விஞ்ஞான கோட்பாடுகள் எப்பொழுதும் மாறிவருவதாலும், கொஞ்சம் முரட்டுத்தனமாகவும் இருப்பதால், என்னுடைய விசுவாசத்தை இவைகளில் தொங்கவிட விரும்பவில்லை.

ஆனால், இன்னொரு வகையான பிரச்சனையும் உண்டு. எங்களுடைய பள்ளியில், பாடங்கள் மற்றும் விளையாட்டுகளை தாண்டியும் சிலவற்றை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். ஏனெனில், குழந்தைகள் அநேக வித்தியாசப்பட்ட நாடுகளில் இருந்தும் வந்து பயில்வதினால் ( சிலருக்கு ஆங்கிலம் கூட தெரியாது! ), நாங்கள் ஒரு சின்ன உலகத்தையும், பிற கலாச்சாரம் மற்றும் மதங்களையும் காணமுடிகின்றது.

ஒரு புதிய பள்ளியில் சென்று சேர்ந்தால், நீங்கள் எவ்வளவு தனிமையாக உணருவீர்கள். ஆகையினால், இந்த வருடம் எங்கள் பள்ளியில் இரண்டு புதிய பையன்கள் சேர்ந்தபோது, நான் அவர்களுடைய வகுப்பறையை காண்பித்தேன். பின்பு நாங்கள் நல்ல நண்பர்களாக மாறி, நான் அவர்களைப் பற்றி நன்கு அறிந்துகொண்டேன். ராம், இந்தியாவில் இருந்து வந்திருந்தான். அமெரிக்காவில் உள்ள பெரும்பான்மையானோர் தாங்கள் கடவுளையும் (தேவன்), பைபிளையும் நம்புவதாக கூறும்போது, இந்தியாவில் உள்ள பெரும்பாலானோர் இந்துக்கள். ராமும் ஒரு இந்து; மேலும் அவன், அவர்களின் கடவுள்களில் ஒருவரின் பெயரினால் பெயரிடப்பட்டுள்ளான்; அது எனக்கு மிகவும் வினோதமாக இருந்தது.

இன்னொரு புதிய மாணவனான முகமதுவும் இந்தியாவில் இருந்தே வந்திருந்தான்; ஆனால் அவன் ஒரு முகமதிய மதத்தவனும், அந்த மதத்தை துவக்கிய மனிதனின் பெயராலே பெயரிடப்பட்டவனுமாயிருந்தான்.

**- தொடரும்.**



நீங்கள் உலகில் என்ன மாற்றத்தை விரும்புகிறீர்களோ,
நீங்களே அதுவாக மாறுங்கள்!

- Mahathma Gandhi

# தேவனுடைய வார்த்தைகள்

## The Word of God

-J.C. Choate

தேவன் நிச்சயமாக மனித குலத்தை, அவர்களுக்கான தன்னுடைய பரிசான 'வசனத்தினால்' ஆசீர்வதித்துள்ளார். இதனை ஒவ்வொரு ஆத்துமாவும் உணர்ந்து, அதற்கான தன்னுடைய நன்றியை (பாராட்டை) வெளிப்படுத்தும்படி, அதனைப் படித்து அதை நேர்மையாக கைக்கொள்வது நலமாக இருக்கும். மனிதன் எவ்வளவு சாமர்த்தியமானவனாக மாறினாலும், தனக்கான தேவ வெளிப்பாட்டை பைபிளைத் தவிர வேறு எங்குமிருந்தும் பெற இயலாது.

இந்த உலகம் இதுவரை அறிந்ததில் மிகச்சிறந்த புத்தகம் பைபிள் தான்; மேலும் அதற்கு நிறைய காரணங்கள் உண்டு. பைபிள் 'இன்னொரு' புத்தகம் அல்ல; மாறாக, தனித்தன்மை மற்றும் அசாதாரணமானது. இதில் உள்ள எழுத்துக்களின் தொகுப்பு பல வருடங்களாக பரிமாறப்பட்டு, ஆனாலும், இன்றும் மிக சமீபத்தியதாகவும், இதுவரை எழுதப்பட்ட எந்த புத்தகத்தையும் விட பயனுள்ளதாகவும் உள்ளது. இந்த புத்தகத்திற்கு நிறைய எதிராளிகள் இருந்தனர்; ஆனாலும் எல்லாரையும் முறியடித்து எல்லா போர்களிலும் வெற்றியை சந்தித்தது. அநேக பிரசித்தி பெற்ற புத்தகங்கள் தொடர்ச்சியாக வந்தாலும், ஆண்டுக்கு ஆண்டு பைபிள் மட்டுமே சிறந்த விற்பனை புத்தகமாகவும் இருக்கிறது.

இந்தப் புத்தகத்தின் சிறப்புத் தன்மைக்கான ஒரு காரணம், இது தேவனால் அருளப்பட்டு கிடைத்த புத்தகம். இதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் தெய்வீகத் தன்மையுடையது. ஆகையால் எல்லோருமே, இதில் உள்ள ஏதாவது ஒரு பகுதி விஷமத்தன்மையானது அல்லது அருளப்படாதது என்ற பயமின்றி படித்து, நம்பலாம். இதைப் பற்றி பேதுரு கூறுகையில், "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்" என்றார் (2பேதுரு 1:21).

பவுலும் பேதுருவின் எண்ணங்களையே பிரதிபலிப்பவராக இந்த கருத்தை சார்ந்து கூறுகையில், ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;

தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” என்றார், ( 2 தீமோ 3:16,17 ). ஆகையால், தேவனுடைய வார்த்தையை சந்தேகப்படாதீர்கள்; அதை நம்புங்கள்!

ஆண்டவரைப் பொருத்தமட்டில், வேதாகமத்தின் ஒரு வார்த்தையை சந்தேகிப்பது என்பதுகூட, அவை முழுவதையும் புறக்கணிப்பதற்கு சமமாக எண்ணுகிறார்.

வேத வாக்கியங்கள் ‘எல்லாம்’ தேவனால் அருளப் பட்டவை யாகையால், அவையனைத்தையுமே அப்படியே மதிக்க வேண்டும். அவைகளோடே எதையும் கூட்டவோ, அவற்றில் இருந்து எதையும் குறைக்கவோ, அவற்றில் எதையும் மாற்றவோ மனிதனுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. ஆனால் நிஜத்தில், இப்படி செய்வதைப் பற்றி எச்சரித்துள்ளார் தேவன். யோவான் நமக்கு கூறுவது என்னவெனில், ‘‘இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்” என்கிறார். மேலும் பவுல் கூறுகையில், ‘‘முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தை யெல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்’’. என்கிறார். அப்படியானால், வேத வசனத்துடனான நம்முடைய தொடர்பு மிகவும் கவனமுடையதாக இருக்க வேண்டும்.



இருள் இருளை நீக்காது; வெளிச்சத்தால் மட்டுமே அது முடியும்.
வெறுப்பு வெறுப்பை போக்காது; அன்பினால் மட்டுமே அது முடியும்

- Martin Luther King Jr

மேலும், இந்த அடிப்படை சத்தியத்தை புரிந்து கொள்ளுதல் ஒரு சிரமமான விஷயம் கிடையாது. தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது ; அதனை விசுவாசித்து கீழ்படிகிற யாவரையும் இரட்சிக்கும் வல்லையுள்ளது, (யோ 8: 32; 17; 17). அது ஒரு ஆத்துமாவை காப்பது மட்டுமின்றி, அதை வெளிச்சத்தின் பாதையில் வைத்து, அதினிமித்தம் அந்த நபரின் ஆத்துமாவை வரவிருக்கும் உலகிற்கு தகுதிப்படுத்தும், (சங் 119:105; வெளி 22: 14).

பைபிள் (வேதாகமம்) எல்லா காரணங்களுக்கான ஒரு புத்தகம்; அது துக்கத்தில் இருப்பவரை ஆறுதல் படுத்தும்; சோர்ந்துபோயிருக்கும் ஒருவருக்கு உற்சாகம் கொடுக்கும்; பெலவீனமானவருக்கு பெலன் கொடுக்கும் ; இழந்துபோன நிலையில் இருப்பவர்க்கு நம்பிக்கை தரும். ஆத்துமாவிற்கு ஒரு தேவை இருக்குமாயின், புத்தகங்களின் புத்தகமாகிய பைபிள் அதை கொடுக்கும்; ஆம், ஒரு தனிநபருக்கு எந்த கேள்வியிருப்பினும் வேதாகமம் அதற்கு பதிலளிக்கும். மனிதன் எங்கிருந்து வந்தான்? இங்கே அவன் இருப்பதன் நோக்கம், அவன் எங்கே போகப்போகிறான்? என்று வேதவசனம் கூறுகின்றது. மேலும் வேதாகமமானது மனிதனின் வழிகாட்டிப் புத்தகமாகவும், பாதைக்கான வரைபடமாகவும் இருக்கிறது. வேத புஸ்தகம் ( பைபிள் ) நித்தியமான தன்மை உடையதால், அது எப்பொழுதும் ஒழிந்து போகாது. “வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை” (மத் 24:35) என்று கிறிஸ்து கூறுகிறார். மேலும் இறுதியில், வேதாகமமே நம்மை நியாயந்தீர்க்கும் என்று வாசிக்கிறோம்: “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்”.

என் நண்பனே! வேத வசனங்களை நம்பு; அதை உன்னுடைய தினசரி தோழனாக்கிக் கொள்; அதற்கு கீழ்ப்படிந்து, அது நீ உன் வாழ்வில் செய்யும், சொல்லும் எல்லாவற்றிலும் ஆளுகை செய்ய அனுமதி; அப்பொழுது இவ்வுலகிலும், இனி வரப்போகும் உலகிலும் அது உன்னை ஆசிர்வதிக்கும். இந்த வார்த்தைகளானது என்றென்றும் நிலைத்திருந்து, ஒரு நாளில் இவ்வுலகை நியாயந்தீர்க்கும் என்பதை சற்றே நினைவுகூறு. ஆகையால் இந்த வேத வாக்கியங்கள் இரட்சிக்கும், மேலும் அவைகளே நம்மை தண்டனைக்கும் உட்படுத்தும்.

# பரிசுத்த ஆவியும் இயேசு கிறிஸ்துவும்

பிரியமானவர்களே!

கடந்த இதழில் பரிசுத்த ஆவியானவர், அன்று, பழைய ஏற்பாட்டில் எப்படி அருளப்பட்டார், யாருக்கு அருளப்பட்டார், யாருக்கு அருளப்படவில்லை என்று ஆராய்ந்தோம். இதன் தொடர்ச்சியாக அன்று, புதிய ஏற்பாட்டின் ஆரம்பக் காலத்தில் ஆவியானவர் அருளபட்ட விவரத்தையும் ஆராய்வோம் வாருங்கள். புதிய ஏற்பாட்டு யுகம் (கிறிஸ்துவின் யுகம்) அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் துவங்கினாலும், அதற்கு ஆயத்தப்படுத்தப்பட்ட காலம் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களில் குறிப்பிடப்படுகிறது.

இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானகனிடத்தில் வந்து யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றார். நம்முடைய முன்மாதிரிக்காகவோ, தமது பாவமன்னிப்பிற்காகவோ அவர் ஞானஸ்நானம் பெறவில்லை, (மத்தேயு 3:15). எல்லா நீதியையும் நிறைவேற்றும்படி ஞானஸ்நானம் பெற்றார் (மத்தேயு 3:16,17). பரிசுத்த ஆவியானவர் புறா ரூபங்கொண்டு அவர் மேல் இறங்கினார் (லூக்கா 3:22). (எனது வலியுறுத்தல்) இந்நிகழ்ச்சி இன்று அநேக கேள்விகளுக்கு இடமளித்துள்ளது.

**1. "பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இருதயத்தில் உணரத்தக்க வகையில் அருளப்படுகிறார்" என்பது அநேக கள்ள போதகர்களின் வாக்கு வாதம். இது உண்மையாயின் கிறிஸ்துவின் மீது ஆவியானவர் இறங்கின காட்சி அவரால் உணரப்பட்ட ஒன்றா?**

இல்லை. முதலாவதாக, ஆவியானவர் கிறிஸ்துவின் இருதயத்தில் ஊற்றப்படவில்லை, அவர் மேல் ''இறங்கினார்'' என்று வசனம் போதிக்கிறது. எனவே ஆண்டவர் தமது இருதயத்தில் உணருவதற்குரிய அவசியம் எதுவுமில்லை. பரிசுத்த ஆவியானவர் தம்மேல் இறங்குவதை கிறிஸ்துவும் பார்த்தார், அவரை ஞானஸ்நானப்படுத்திய யோவானும் கண்டார், (மத்தேயு 3:16; யோவான் 1:33,34). எனவே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை "உணருவதன் மூலமே அறிய முடியும்" என்பது அபத்தமல்லவா? இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவரையும் இருதயத்தையும் சம்பந்தப்படுத்தி அநேக வசனங்கள் பேசுவது உண்மைதான். ஆனால் ஒரு இடத்தில் கூட இயேசுவுக்கு அருளப்பட்டதைப் போன்ற "அபிஷேகம்" எனும் ரீதியிலோ, அற்புத

அடையாளங்களை நடப்பிக்கிற வரங்களுக்காகவோ இருதயத்தில் ஊற்றப்பட்டதாகக் குறிப்பிடவில்லை. மாறாக, ரோமர் 5:5ல் பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய “அன்பு” இருதயங்களில் ஊற்றப்பட்டதாக பவுல் குறிப்பிடுகிறார். 2 கொரிந்தியர் 1:22ல் “ஆவி” என்னும் “அச்சாரம்” நமது இருதயங்களில் கொடுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இவ்விரண்டுமே கிறிஸ்தவனுக்குள் (உள்ளே) வாசம் பண்ணும் ஆவியானவரின் வரத்தைப் பற்றியே பேசுகிறது (அப்போஸ்தலர் 2:38; எபேசியர் 1:12,13, கலாத்தியர் 5:22,23; ரோமர் 8:8-11).

**2. இயேசு தெய்வமானால் அவருக்கு ஆவியானவர் ஊற்றப்படுவது அவசியம்தானா?**

இயேசு இந்த பூமியில் இருந்த போது மனுஷகுமாரனாக இருந்தார். ஏசாயா 61:3-ல், கிறிஸ்து ஆவியானவர் தன் மீது ஊற்றப்பட்டதை தாமே விவரிப்பது போல, ஏசாயாவுக்கு தீர்க்கதரிசனமாகக் கொடுக்கப்பட்டது. ‘‘கர்த்தர்ராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைபட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்’’ என்று சொல்லப்படுகிறது.

**3. இயேசு கிறிஸ்து மரியாளிடத்தில் கர்பந்தரிக்கப்பட்டதே பரிசுத்த ஆவியினால் தான் எனும்பொழுது, தனியாக ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து பரிசுத்த ஆவி கொடுக்கப்படக் காரணம் என்ன?**

காரணத்தை யோவான் விளக்கப்படுத்துகிறார். யோவான் 1:33,34-ல், ‘‘நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர் (பிதாவாகிய தேவன்): ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே, தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்’’. யோவான் ஸ்நானகன் கிறிஸ்து தான் வரவிருந்த மேசியா என கண்ணாரக் கண்ட சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, அடையாளப்படுத்த கொடுத்ததும் ஒரு காரணம்.



நீங்கள் யாராக இல்லையோ அதினால் நேசிக்கப்படுவதைவிட,
நீங்கள் யாராக இருக்கிறீர்களோ அதினால் வெறுக்கப்படுவது நல்லது

- Andre Gide

### 4. கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட ஆவியின் அளவு என்ன?

புறாவின் ரூபங் கொண்டு ஆவியானவர் அவர்மேல், இறங்கியிருந்தாலும், ஆவியானவர் புறாவின் மாம்ச சரீரத்தை பெற்றவரல்ல. ஒரு புறாவின் சரீர அளவு இயேசுவுக்கு ஆவியானவர் கொடுக்கப்பட்டார் என்றும் பொருளல்ல. ஆகிலும் அப்போஸ்தலனாகிய யோவான், ''தேவனால் அனுப்பப்பட்டவர் (இயேசு) தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்", என்று சொன்னார். புறாவின் உருவம் அடையாளமாகக் கொடுக்கப்பட்டதை எண்ணாமல், அதைத் தங்களுக்கு சாதகமாக்கி, தாங்களும் புறா வடிவத்தில் இயேசுவைப் போல அளவற்ற ஆவியைப் பெற்றதாகக் கூறுவோர் இருக்கிறார்கள். இவர்களைக் கேட்கிறேன், இவர்களுக்கு அப்படி கொடுக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? இவர்கள் கிறிஸ்துவுக்கு சமமாகி விட முடியுமா?

### 5. நமது ஐந்தாவது கேள்வி, ஏன் புறா வடிவம் கொடுக்கப்பட்டது?

மேலே கூறிய காரணத்திற்கு அப்பால், வேறு காரணம் கூறப்படவில்லை. மறைவானவைகள் தேவனாகிய கர்த்தருக்கே உரியவை (உபாகமம் 29:29). ஆகிலும் சிலர் நியாயமான யூகத்தை வெளிப்படுத்துகின்றனர். இதை தவறு என்று என்னால் வாதிட இயலவில்லை. அவர்கள் சொல்லும் விளக்கம் : புறா கபடற்றது, தூய்மையானது, சமாதானத்தைக் குறிப்பது மற்றும் சாந்த குணமுள்ளது. இயேசுவும் இந்தக் குணாதிசயங்களைக் கொண்டவர் என்பதை இந்நிகழ்ச்சி அடையாளப்படுத்துகிறது என்பர். (மத்தேயு 10:16; 11:29; 12:19-21).

மேலே குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில், பரிசுத்த ஆவியைக் குறித்து முறையாய்க் கற்றவர்கள், இந்த வசனங்களை மீறலாமா? ஆவியானவர் இருதயத்தில் ஊற்றப்பட்டதை தாங்கள் உணருவதாகச் சொல்லுவதற்கு வசன ஆதாரம் உண்டோ? இயேசுவுக்கு யாராகிலும் தன்னை ஒப்பிட்டு பரிசுத்த ஆவியை அளவில்லாமல் பெறுவதாக கூறுவது சரியா? வாசகரே, சிந்திப்பீர்.

இயேசுவுக்கு அன்று அளவில்லாத ஆவி கொடுக்கப்பட்டது. அதற்கான காரணமும் நோக்கமும், அவர்தான் வரவிருந்த மேசியா என நிரூபிக்க. யோவானும், யோவான் ஸ்நானகனும் இதை உறுதிப்படுத்தினர். இன்று இயேசுவைப் போல் பரிசுத்த ஆவியை நேரடியாகப் பெற்றோம் என்று சொல்வது அவர்களின் அறியாமையும் கற்பனையுமே!

**- தொடரும்.**

## சிறுவர் பகுதி

# ௧. "உன்னை போல் பிறனையும் நேசி"

[வசன பகுதி லூக்கா 10:25-37]

**சம்பவ சுருக்கம் :**

ஒரு முறை ஆண்டவர் இயேசு ஜனங்களுக்கு போதனை செய்துக் கொண்டிருந்த போது, நியாய சாஸ்திரி ஒருவன் வந்து, ஆண்டவரை சோதிக்கும் படி, நித்திய ஜீவனை பெற நான் என்ன செய்ய வேண்டும் என கேட்டான். ஆண்டவர் நியாய பிரமாணத்தில் எழுதியிருக்கிறதை செய் என்றார். அவன் : உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழுமனதோடும்,பெலத்தோடும், ஆத்துமாவோடும் அன்பு செய். மேலும் உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறு என்று எழுதியிருக்கிறதே; எனக்கு பிறன் யார்? என்று கேட்டான். ஆண்டவர் அவனுக்கு ஒரு உவமையைச் சொன்னார். ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவிற்கு பிரயாணமாக போகையில், அவனை திருடர்கள் வழி மறித்து அவனுடையதை எல்லாம் பிடிங்கி, அவனை அடித்து குற்றுயிராக விட்டு சென்றனர். கொஞ்ச நேரத்தில் அந்தப் பக்கம் ஒரு ஆசாரியன் வந்தான். சாக கிடக்கிற அந்த மனிதனை கண்டும் காணாமல் சென்றான். சிறிது நேரம் கழித்து ஒரு லேவியன் வந்தான், அவனும் அந்த மனிதனை கண்டுக்காமல் சென்றான். பிறகு அந்த வழியே ஒரு சமாரியன் வந்தான்; அவன் அடிபட்ட அந்த மனிதனை கண்டு, அவனுக்கு முதலுதவி செய்து, அவனது காயங்களை கட்டி, தன்னுடைய சுய வாகனத்தின் மேல் ஏற்றி, அடிபட்ட மனிதனை சத்திரத்திற்கு கொண்டு போய் அவனை பராமரித்தான். மறுநாளில் சத்திரக்காரணிடம் இரண்டு பணத்தை கொடுத்து, நீ இவனை பாத்துக்கொள், இவனுக்கு நீ அதிகமாக செலவழித்தால், நான் திரும்பி வரும் போது மீதி பணத்தை



தருகிறேன் என்றான். இப்பொழுது கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு மூன்று பேரில் பிறனாக இருந்தது யார்? என்று இயேசு கேட்டார். நியாய சாஸ்திரி, ‘அவனுக்கு இரங்கி உதவி செய்தவன்’ என்றான். ஆண்டவர் அந்தபடி நீயும் செய் என்றார்.

டியர் குட்டீஸ்! நாம் நமக்கு தெரிந்த, அறிமுகமானவர்களுக்கு மட்டுமல்ல, அறியாதவர்களுக்கும் (ஆபத்திலிருந்தால்) உதவி செய்ய வேண்டும். நாம் அவர்களுக்கு செய்கிற உதவி ஆண்டவருக்கு செய்வதாகும். அதனால், நமக்கு தேவன் தந்த பலத்தின் படி உதவி செய்கிறவர்களாயிருப்போம்.

**மனன வசனம் :– நீதி 19:17**

“ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்”.

## உ. “நன்றியுள்ளவர்களாயிருங்கள்”

**வசன பகுதி லூக்கா 17:11–19]**

**சம்பவ சுருக்கம்** :

ஒரு முறை ஆண்டவர் இயேசு எருசலேமிற்கு பிராயாணம் போகையில், சமாரியா, கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்து போனார். அப்படி அவர் ஒரு கிராமத்தின் வழியாக போகையில், குஷ்ட ரோகமுள்ள பத்து பேர் அவரிடத்தில் வந்து, தங்களுக்கு இரங்கி சுகமாக்கும்படி சத்தமாக அவரை வேண்டிக் கொண்டார்கள். ஆண்டவர் மனதிரங்கி, அவர்களை பார்த்து, நீங்கள் போய் உங்களை ஆசாரியனுக்கு காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் பத்து பேரும் போகையில் சுகமானார்கள். அவர்களில் ஒருவன் தான் சுகமானதை கண்டு, திரும்பி ஆண்டவரிடம் வந்து, அவருடைய பாதத்தில் விழுந்து, உரத்த சத்தமாக தேவனை மகிமைப்படுத்தி, ஆண்டவருக்கு நன்றி செலுத்தினான். அவன் சமாரியனாக இருந்தான். ஆண்டவர்;



சுகமானது பத்து பேர் அல்லவா! மற்ற ஒன்பது பேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்த உன் ஒருவனை தவிர மற்றவர்களுக்கு நினைவில்லையா, எழுந்திரு, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

டியர் குட்டீஸ்! ஆண்டவர் 10 பேரை சுகப்படுத்தினார். ஆனால், ஒருவன் மாத்திரமே திரும்பி வந்து அவருக்கு நன்றி சொன்னான். ஆண்டவர், 'நீ ஒருவனாவது நன்றி சொல்ல வந்தாயே, பரவாயில்லை' என்று சொல்லாமல், 'மற்ற ஒன்பது பேர் எங்கே?' என்று கேட்டார். ஏன் தெரியுமா? ஆண்டவர் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என விரும்புகிறார். அதனால், அப்பா, அம்மா அல்லது யாரானாலும் சரி, செய்த உதவி சிறிதானாலும் சரி, பெரிதானாலும் சரி நாம் நன்றி சொல்ல வேண்டும். தேவன் நாம் நன்றியுடன் வாழ நமக்கு உதவி செய்வாராக.

**மனன வசனம் | தெச 5:18**

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களை குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது".

## வேதாகமத்தில் நட்பு - FRIENDSHIP IN THE BIBLE

நட்பு என்பது, ஒருவரையொருவர் புரிந்த, ஏக மனதுடைய இருவருக்கிடையிலானது. அது எந்த உறவுகளுக்கு இடையிலும் வரலாம்.

ரூத் 1:16,17 – மாமியார், மருமகளுக்கிடையிலான சிறந்த நட்பு.
(உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்;
உம்முடைய தேவன் என்னுடைய தேவன்)

1 சாமு 18:1-4 – தந்தையின் எதிரியை சிநேகித்த யோனத்தான்!
(தாவீதின் ஆத்துமாவோடே யோனத்தானின்
ஆத்துமா இசைந்திருந்தது)

மத் 27:55-61 – மரித்தபின் இயேசுவுக்கு நண்பனான யோசேப்பு
(அநேகர் இயேசுவை விட்டு பிரிந்து சென்ற சூழலில்,
அவரது உடலை பெற்றவன்)

பிலி 2:19-25 – "என்னைப் போல மனதுள்ளவன்" என்று பவுலால் சொல்லப்பட்ட நண்பன் தீமோத்தேயு.

**கிறிஸ்து உங்கள் நண்பனா? நீங்கள் ஒரே மனதுள்ளவர்களா?**

# செஞ்சிலுவைச் சங்கம்

- 1859 ஜீன் 24ல் “செல்போரினா போர்” நடந்தது.
- நிறைய பேர் அடிபட்டு விழுந்து கிடந்தார்கள்.
- அவர்களுக்கு ஒருவர் உதவி செய்ய நினைத்து, பக்கத்திலுள்ள கிராம மக்களை அழைத்து அவர்களை காப்பாற்றினார்.
- அவர் 1862ல் போரின் கொடுமைகளை பற்றி ஒரு புத்தகம் எழுதினார். அதை ஐரோப்பா முழுவதும் விநியோகம் செய்தார்.
- அவர் யார்? சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனிவாவில் 1828 மே 8ல் பிறந்த ஹன்றி டுனால்டு.
- இவர்தான் உலக செஞ்சிலுவை சங்கம் தோன்ற காரணமானவர்.
- இவர் பிறந்த மே 8ம் தேதி தான் உலக செஞ்சிலுவை நாள்.
- 1915லே முதல் உலகப்போருக்கு பிறகு ஐரோப்பாவிலே பள்ளிக் கூடங்களிலே இந்த சங்கம் அமைக்கப்பட்டது.
- 1919லே ஐக்கிய நாடுகள் சபை இந்த இயக்கத்தை அங்கிகரித்தது.
- 1920லே இந்தியா சட்டம் இயற்றியது. இந்தியாவின் குடியரசு தலைவர்தான், இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர், மாநிலங்களுக்கு அந்தந்த மாநில கவர்னர்களும் மாவட்டங்களுக்கு அந்தந்த மாவட்ட கல்வி அதிகாரிகளும் தலைவர்களாக இருக்கிறார்கள்.

| உலகப் போதனைகள் | வேதாகமத்தின் பதில் |
|---|---|
| விசுவாசம் மட்டும் போதும் எனும் போதனை | யாக் 2:24 |
| ‘சபை’ முக்கியமானதல்ல | மத் 16:18 |
| கிருபை மட்டும் போதும் | எபே 2:8,9 |
| ஆராதனையில் வாத்தியக் கருவிகளின் இசை | எபே 5:16 |
| விருப்பப்படி ஆராதனை | யோ 4:24 |
| சூழ்நிலை, சமயம் கிடைக்கும்போது ஆராதனை, சபை கூடுகைக்கு செல்வது | எபி 10:25 |
| உலகத்து விஷயங்களில் மகிழ்ச்சியாயிருப்பது தவறில்லை | யாக் 4:4 |
| தேவன் இரக்கமுள்ளவர்; ஆகையால் எல்லாரும் இரட்சிக்கப்படுவர் | மத் 25:46 |
| நரகம் என்ற ஒன்று கிடையாது | 2 தெச 1:7-9. |

# நியாயத்தீர்ப்பின் நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

ரோம 2:1-16

நீதி கையளிக்கப்பட்டு, தவறுகள் யாவும் நேர்த்தப்படும் இந்த உச்சக்கட்டமான நாளை நோக்கி வரலாறு தயக்கமின்றி நகர்ந்துக்கொண்டிருக்கிறது.

அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறார்களா?

## I. நியாயத்தீர்ப்பு தப்பிக்க இயலாததாக உள்ளது (ரோம 2:1-5)

### ❖ அ. தேவன் நீதியின்படியே நியாயந்தீர்ப்பார் (ரோம 2:1-3)

- இன்னொருவருடைய வாழ்வில் உள்ள பாவங்களைக் காண்பது மிகவும் சுலபமாக உள்ளது. அதையே ஒருவர் தனக்குள் இருப்பதைக் காணுதல் என்பது மிகவும் கடினமாக உள்ளது.

- தேவனுடைய நீதிமன்றத்தில் தவறான புரிந்துக்கொள்ளுதல், தவறான பிரதிநீதித்துவபடுத்துதலோ, நீதியை தவறாக எடுத்துச் சொல்லுதலோ மற்றும் தவறுகள் எதுவுமே இராது. யாவும் சத்தியத்தின் படியே இருக்கும்.

- எவரொருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க இயலாது.

### ❖ ஆ. மனம் வருந்தாதவர்களை தேவன் நியாயந்தீர்ப்பார் (ரோம 2:4)

- தேவன் அவர்களுக்கு மனம்திரும்பும்படி நேரம் மற்றும் வாய்ப்புகளை கொடுத்தார்.

- அவர்களோ தேவனுடைய தயவை, தேவன் தங்களது பாவங்களை காணாமல் விட்டுவிட்டார் என்பதற்கு அடையாளமாக எடுத்துக் கொண்டார்கள்.

- ஒருவர் பாவங்களை செய்கிறார்; ஆனால் ஒன்றும் நேர்வதில்லை, அவரை தேவன் அந்த இடத்திலேயே அடித்து வீழ்த்துவதில்லை. அவர்களோ தேவனுக்கும் தங்களுக்கும் உள்ள உறவு சரியாக இருக்கிறது என்று நினைத்துக்கொண்டனர்.

- அந்த நாள் எப்பொழுது வருமென்று தெரியாது, ஆனால் நேற்றைவிட இன்று வெகு அண்மையில் உள்ளது.

### ❖ இ. தேவன் ஒவ்வொருவரையும் நியாயந்தீர்ப்பார் (ரோம 2:5)

குற்றம் செய்தவர், மனிதர்களுடைய நியாயத்தீர்புக்கு தப்பித்துக் கொள்ளலாம்; தண்டனை விதிக்கப்பட்டாலும் கூட, அவர்கள் சிறைத்தண்டனையில் இருந்து வழக்கறிஞர்கள் மூலமாக தப்பித்துக்கொள்ளலாம்.

- தேவனுடைய நியாயத்தீர்ப்பில் எந்த ஒரு பாவமும் கண்டறியப்படமால் போகாது. (எபி 4:13)

எந்தப்பாவியும் நியாயத்தீர்ப்பு நாளில் இல்லாது போகமாட்டார், வெளி 20:12. வாய்தாவும் கிடைக்காது.

## II. நியாயத்தீர்ப்பு வழுக்கிட இயலாததாக இருக்கும் (ரோம 2:6-11)

❖ அ. தேவன் நமது கிரியைகளுக்கு தக்கவாறு நியாயந்தீர்ப்பார். (ரோம 2:6-8)

- கிரியைகள் விதைகளைப் போன்றுள்ளன; இப்பொழுது நீங்கள் அவற்றை விதைக்கிறீர்கள், பிற்பாடு அவற்றை நீங்கள் அறுவடை செய்வீர்கள் (2 கொரி 5:10)

❖ ஆ. விதிவிலக்குகள் எதுவும் இராது.

- ரோம 2:9-11, விதிவிலக்குகள் எதுவும் இருக்குமா? இல்லை. "பொல்லாங்கு" செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவிற்கும் தண்டனை உண்டு.

## III. நியாயத்தீர்ப்பு பட்சபாதமற்றதாக இருக்கும் (ரோம 2:12-15)

அ. புறஜாதியாரும், யூதர்களும் நியாயந்தீர்க்கப்படுவர் (ரோம 2:12-13)

நியாயப்பிரமாணம் இல்லாமல் செய்கிறவர்களுக்கு நியாயப்பிரமாணமில்லாமல், நியாயப் பிரமாணத்துடன் செய்கிறவர்களுக்கு நியாயப்பிரமாணத்தின்படி நியாயத்தீர்ப்பு இருக்கும்.

நாம் சிலரிடத்தில் கனிவாக, சிலரிடத்தில் கடினமாக நடந்துக்கொள்கிறோம். ஆனால் தேவன் பட்சபாதமில்லாதவர் (உபா 10:17)

ஆ. எல்லாரும் நியாயமாய் நியாயந்தீர்க்கப்படுவோம். (ரோம 2:14-15) எல்லாருக்கும் தேவனுடைய நீதி அவசியாமாயிருக்கிறது.

## IV. நியாயத்தீர்ப்பு தவிர்க்க இயலாததாக இருக்கும் (ரோம 2:16)

ரோம 2:16, அந்தரங்கமான என்பது மற்றவருக்கு தெரியாத நமது சிந்தனைகள், நோக்கங்கள், கேட்கப்படாத வார்த்தைகள் மற்றும் செயல்களை குறிக்கிறது, (அப் 17:31). சிலர் அன்பான தேவன் எவரொருவரையும் நரகத்திற்கு அனுப்பமாட்டார் என்று நம்புகின்றனர்.

இயேசு நம்முடைய இரட்சகர் மட்டுமல்ல! நம்முடைய நியாயாதிபதியும் அவரே. யோவா 5:22



**தினந்தோறும் - DAILY**

அப் 5:42 - உபதேசம்பண்ணி, பிரசங்கித்தார்கள்

அப் 17:11 - வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர்.

பாடம் 1

# யூத மற்றும் ரோம வரலாற்றாலர்கள்

## Jewish and Roman Historians

சில எதிர்ப்பாளர்களின் கூற்று என்னவெனில், இயேசு கிறிஸ்து எப்பொழுதாவது வாழ்ந்ததற்கும், பெரிய அதிசயங்களை செய்ததற்கும், ரோமச் சிலுவையில் மரித்ததற்கும் அல்லது மரித்தவர்களில் இருந்து உயிருடன் எழும்பியதற்கும் நிச்சயமான ஆதாரங்கள் ஏதும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியில் இல்லை என்பதே!

இது உண்மையா? வேதாகமத்திற்கு வெளியில் இயேசுவைப் பற்றி ஏதேனும் ஆதாரங்கள் உண்டா? இனி வரப்போகும் பாடங்களை படித்து, நீங்களே நீதிபதியாய் இருந்து முடிவு செய்யுங்கள்.

ரோம அரசாங்கத்தின் முக்கியத்துவம் இல்லாத, ஒதுங்கிய ஒரு பகுதியில் இயேசுவின் ஊழியம் சம்பந்தப்பட்டதாகையால், உலக வரலாற்றில் அவரைப் பற்றி இவ்வளவு விபரங்கள் இருக்கிறது என்பது ஆச்சர்யமான ஒன்று. இந்தப்பாடத்தில், மிகப்பெரிய ரோம மற்றும் யூத பதிவேடுகளில் சிலவற்றை நாம் ஆராய்வோம்.

**ஜோசேபஸ் (Josephus)**

ஃலெவியஸ் ஜோசேபஸ் என்பவர்தான் இயேசு கிறிஸ்துவைப்பற்றி குறிப்பிட்ட மிக பழமையான கிறிஸ்தவரல்லாத எழுத்தாளர். யூத – ரோம போரின் போது, கலிலேயாவில் இருந்த ரோமர்களுக்கு எதிராக புரட்சிப்படையை வழிநடத்திய ஒரு யூதன், ஜோசேபஸ் (கி.பி 66-74). ரோம ஜெனரலான வெஸ்பாசியன், ஜோடபாடா (Jotapatta) என்ற பட்டணத்தை பிடித்தபோது, ஜோசேபஸ் தானாக கைதாகி, தன்னுடைய மீதி காலத்தை ரோமர்களை சேவிப்பதில் கழித்தார்.

கி.பி. 37ல் ஜோசேபஸ் பிறந்து, ரோமபுரியில் கி.பி. 94ல் மரித்தார். ஆகையால் அவர், அப்போஸ்தலரின் சமகாலத்தவர் ஆவார். முதல் நூற்றாண்டில் பிற்பகுதியில் அவர், இரண்டு மிகப்பெரிய வரலாற்று படைப்புகளை எழுதினார்; அவை “யூதப் போர்கள்” (The Jewish Wars) மற்றும் ‘‘யூதரின் தொன்மையான நடைமுறைகள்” (Jewish Antiquities).

இந்த ‘‘யூதரின் தொன்மையான நடைமுறைகள்”ன் புத்தகம் 20, பாடம் 9ல், இந்த ஜோசேபஸ் இயேசுவைப் பற்றியும், அவரது சகோதரர் யாக்கோபைப் பற்றியும் குறிப்பிடும் போது, இவ்வாறு எழுதுகிறனர். “ஃபெஸ்டஸ் (Festus) இப்பொழுது

மரித்துப்போனான்; மேலும் அல்பினஸ் (Albinus) இருந்தாலும் வீதியில் இருக்கிறான்; அதினால் அவன் ( அனனஸ்) நீதிபதிகளில் சங்கமாகிய சானஹட்ரினை (Sanhedrin) கூட்டி, அதற்கு முன்பாக **கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட இயேசுவின்** சகோதரனான யாக்கோபையும், வேறு சிலரையும் கொண்டுவரச்செய்து; அவர்களுக்கு எதிராக, சட்டத்தை உடைத்தவர்கள் என்ற குற்றச்சாட்டுகளை உருவாக்கி, அவர்களை கல்லெறியும்படி ஒப்புவித்தான்.

அனனஸ் என்ற யூத பிரதான ஆசாரியன் தைரியமும், துடுக்குமான மனிதன். ரோம ஆளுனரான ஃபெஸ்டஸ் மரித்தபின் யூதேயாவுக்கு புதிய ஆளுனர் வந்த நிலையில், இந்த அனனஸ், ஆளுனர் தன் அதிகாரத்தை பயன்படுத்தி இயேசுவின் சகோதரனான யாக்கோபு போன்ற கிறிஸ்துவ தலைவர்களை விடுவிப்பதை தடுத்து நிறுத்தினான்”.

ஜோசேபஸின் இந்த வரலாற்றுக் குறிப்பை இதுவரை எந்த விமர்சகரும் மறுத்து வெற்றிபெறவில்லை. இந்த ஜோசேபஸின் குறிப்பு, இயேசுவே “கிறிஸ்து” என்றும், “மேசியா” என்றும், அதாவது ‘‘அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்ற உண்மையை உறுதிசெய்கின்றது.

ஜோசேபஸ் தன்னுடைய ‘‘யூதரின் தொன்மையான நடைமுறைகள்’’ (Jewish Antiqutites) புத்தகத்திலும் 18:63-64ல் இயேசுவைப் பற்றி எழுதியுள்ளார். “இப்பொழுதும் இந்த காலத்தில் இயேசு என்னும் ஒரு ஞானமுள்ள மனிதன் இருந்தார்; அவர் அற்புதங்களை செய்பவராகவும், **உண்மையை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளும் ஜனங்களின் போதகராகவும் அவர் இருந்தபடியால் அவரை மனிதன் என அழைப்பது நியாயம்தானா என தெரியவில்லை; யூதரிலும் புறஜாதியாரிலும் அநேகரை அவர் தமது பக்கமாக சேர்த்துக் கொண்டார். அவரே கிறிஸ்து !** நமக்குள் இருந்த பிரதான மனிதரின் ஆலோசனைப்படி பிலாத்து அவரை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்த போது, அவரை முதலாவது நேசித்தவர்கள் அவரை மறுதலிக்கவில்லை; ஏனெனில் **தெய்வீக தீர்க்கதரிசிகள் இதைப்பற்றியும் அவரைப்பற்றிய பத்தாயிரத்திற்கு அதிகமான அற்புதமான காரியங்களை முன்னறிவித்தபடியே அவர் மூன்றாம் நாளில் அவர்களுக்கு முன் உயிரோடு எழுந்தார்;** மேலும் அவருடைய பெயரினாலே வந்த கிறிஸ்தவர் என்ற ஜாதியும் இந்நாள் வரையும் அழிந்துபோகவில்லை”



இந்த உலகில் ‘வாழ்வது’ அரிதாக உள்ளது.
அநேகர் ‘இருக்கிறார்கள்’, அவ்வளவு தான் !

- Oscar Wilde

இயேசுவைக் கண்ணாரக் கண்ட காட்சிகள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே எழுதிய ஒரு கிறிஸ்தவரல்லாத வரலாற்றாலரின் சக்தி வாய்ந்த கூற்று இது. இந்த வாக்கியங்கள் முழுவதுமே உலகம் எல்லாம் உள்ளவர்களால் அதிகாரப்பூர்வமானது என கருதப்படுகிறது. ஆயினும் சில அறிஞர்கள் நினைப்பது என்னவெனில், மேலே நாங்கள் வித்தியாசப்படுத்தி காண்பித்துள்ள வரிகள் பின்னாளிலே பிரதியெடுத்தவர்களால் சேர்க்கப்ட்டது என்பதே.

சரி, வித்தியாசப்படுத்தப்பட்ட அந்த கேள்விக்குரிய பாகங்களை தவிர்த்தாலும் கூட, இயேசு ஒரு ஞானமுள்ள மனிதன் என்றும், அற்புதங்களை செய்தவர் என்றும், அநேகரை தம்மிடம் ஈர்த்தார் என்றும் ஆதாரங்கள் நமக்குண்டே! யூத மதத் தலைவர்களின் தூண்டுதலின்பேரில், இயேசுவானவர் குற்றம்சாட்டப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார், ஆனாலும் அவரை நேசித்தவர்கள் அவரை மறுதலிக்கவில்லை. “கிறிஸ்தவ இனம் அல்லது ஜாதி” ஜோசேபஸ் இந்த வார்த்தைகளை கி.பி.90களில் இவைகளை எழுதியபோது அழிந்துவிடவில்லை.

**யூதர்களின் சட்டத்தொகுதி : (The Jewish Talmud)**

பாபிலோனிய சட்டத்தொகுதியானது 63 புத்தகங்களுடன் – ஒழுக்கம், வரலாறு, சட்டம், சடங்குகள் மற்றும் தெய்வீகக் காரியங்கபைப் பற்றிய அறிவுரைகளை உள்ளடக்கியதாக இருந்தன. அவை பல நூற்றாண்டுக் கால இடைவெளியில் எழுதப்பட்டும், முறைப்படுத்தப்பட்டும் உள்ளது; ஆனால் இயேசுவைக் குறிக்கும் பகுதியானது கி.பி. 70 முதல் 200 க்குள் எழுதப்பட்டது. “சான்ஹட்ரின் 43a” என்றதின் ஒரு பகுதியானது இவ்வாறு கூறுகிறது,

“பாஸ்காவின் சமயத்தில், அவர்கள் இயேசுவை (Yeshu) தொங்கவிட்டனர் (ஒரு பிரதி நாசரேத்தின் இயேசு) என்று கூறுகிறது. மேலும் ஒரு அறிவிப்பாளர் அவருக்கு முன் நாற்பது நாளும் இவ்வாறு கூறிச் சென்றார்; “இவர் கல்லெறியப்படப்போகிறார், ஏனெனில் இவர் பில்லிசூனியம் செய்து இஸ்ரவேலரை தூண்டி தவறான வழியில் நடத்தினார். இவருக்கு சாதகமாக யாராவது எதையேனும் கூற விரும்பினால், அவர் வந்து இவருக்காக வாதிடலாம். ஆனால் அவருக்கு சாதகமாக எதுவும் இல்லாததினால், பஸ்காவின் நேரத்தில் அவரை தொங்கவிட்டனர்”.

இது ஒரு எதிர்ப்பு உணர்வுள்ள கூட்டத்தாரால் கொடுக்கப்பட்ட ஆதாரம் தரும் சாட்சியாகும். எதிர்ப்பாளிகளான யூத தலைவர்கள் இயேசு பஸ்கா நேரத்தில் தொங்கவிடப்பட்டார் (சிலுவையில் அறையப்படுதலுக்கான யூத விளக்கம் அப் 5:30;10:39 ) என உறுதிசெய்தனர்; மேலும் அவர்

அற்புதங்களை செய்தார் (அதை அவர்கள் பில்லிசூனியம் என்றனர்); மேலும் சில யூத போதனைகளில் இருந்து அநேகரை வழிவிலகச் செய்தார். யூதத் தலைவர்கள் அவரை கல்லெறிந்து கொல்ல திட்டமிட்டனர்; ஆனாலும் அதற்கு பதில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். இந்தப் பகுதியில் உள்ள எல்லா முக்கிய குறிப்புகளும் சுவிஷேச புத்தகங்களில் உள்ளவைகளோடு முற்றிலும் ஒத்துப்கோகிறது.

### இளையவரான ப்ளைனி (Pliny the younger)

இரண்டாம் நூற்றாண்டின் முந்தைய பகுதியில் இளையவரான ப்ளைனி, பித்தினியாவின் ஆளுனராக (தற்போது வடமேற்கு துருக்கி) இருந்தார். அங்கே அவர் தன்னைத்தானே ஒரு குழப்பத்துடன் கண்டார். அவருக்கு முன்பாக கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவர்கள் ஆபத்தற்றவர்களாக இருந்ததைக் கண்டார்; ஆனாலும் அவர்கள் பிடிவாதமாக ரோம பேரரசை வணங்க மறுத்தனர்; மேலும் அவர்கள் சிலைவழிபாட்டை பகிரங்கமாக எதிர்த்ததினால், சிலை வியாபாரத்தை பாதித்தனர். இச்சூழலில் ப்ளைனி, கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்த சில கிறிஸ்தவர்களை கொன்றுவிட தீர்மானித்தான். தான் செய்யப்போவது சரிதானா என உறுதியற்ற நிலையில், ப்ளைனி தன் நண்பனாகிய, 'ட்ராஜான்' பேரரசனுக்கு கடிதம் எழுதி அவன் யோசனையை கோரினான். இந்தக் கடிதம் கி.பி. 112ஐ சார்ந்தது.

ப்ளைனி (Pliny) எழுதியது என்னவென்றால், "நான் ஒருபோதும் கிறிஸ்தவர்களை துன்புறுத்தும் செயலில் ஈடுபட்டதில்லை. ஆகையால் இந்த வகையினரை தண்டிப்பதோ, விசாரிப்பதோ எந்த அளவிற்கு சரி என தெரியவில்லை. ...இச்சமயத்தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்பவர்களிடம் நான் பின்வரும் செயல்பாட்டினைக் கண்டேன்: மேலும் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதில் உறுதியுடன் உள்ளனரா என நான் விசாரித்தேன்; அப்படியே அறிக்கை செய்தவர்களை இரண்டாம் மற்றும் மூன்றாம் முறையும் விசாரித்தேன்; மேலும் அவர்கள் கிறிஸ்தவராயிருப்பின் தண்டிக்கப்படுவர் என்றும் மிரட்டினேன்; தொடர்ந்து நிலை நின்றவர்களை தண்டித்தேன். ஏனெனில், அவர்களுடைய கொள்கை, பிடிவாதம் மற்றும் வளைந்து கொடுக்காத தன்மை எப்படியாயிருப்பினும், எனக்கு சந்தேகமேயில்லை அவர்கள் தண்டனைக்குரியவர்கள். இப்படிப்பட்ட நம்பிக்கை உடைய பிற வகுப்பினரும் இருந்தனர்; ஆனால் அவர்கள் ரோம பிரஜைகள் ஆகையால்; அவர்களை ரோமாபுரிக்கு மாற்றம் செய்ய உத்தரவிட்டேன்.

அவர்கள் ( கிறிஸ்தவர்கள் ) உறுதியாக இருந்தனர்; எனினும், அவர்களுடைய குற்றம் என்னவெனில், ஒரு குறிப்பிட்ட

நாளில் விடிவதற்குமுன் ஒன்றுகூடி, கிறிஸ்துவே கடவுள் என்று பாடல்களை பாடி இருப்பதே; மேலும் தவறு செய்யக்கூடாது, திருடக்கூடாது, விபச்சாரம் கூடாது என்பதைப் போன்ற உறுதிமொழிகளினால் ஒன்றரக்கட்டி, மட்டுமின்றி தங்கள் விசுவாசத்தை பொய்யாக்கவோ அல்லது அதை திருப்பி கொடுக்க நிர்பந்திக்கும் போதும் விட்டுவிடாதிருக்கவோ செய்கின்றனர். இவைகள் முடிந்தவுடன் பிரிந்துபோய் மறுபடியும் உணவு உண்ணும்படி ஒன்று கூடுகின்றனர்.

இதினிமித்தம் நான் இந்த விசாரனையை தள்ளிவைத்து உன்னை கலந்தாலோசிக்க முடிவு செய்தேன். அவர்களின் எண்ணிக்கையை பார்த்தபடியினால், இதை உன்னோடு ஆலோசிக்க விரும்புகிறேன். ஏனெனில் எல்லா வயதினரிலும், எல்லா தரப்பினரிலும் மற்றும் எல்லா பாலினத்தவரிலும் அநேகம் பேர் இதனால் தண்டிக்கப்படக்கூடும். ஏனெனில் இந்த நம்பிக்கையானது பட்டணங்களில் மட்டுமின்றி கிராமங்களிலும், பண்ணைகளிலும் பரவியுள்ளது" (புத்தகம்பத்து).

இந்தக் கடிதம் இரண்டாம் நூற்றாண்டின் முன்பகுதியில் கிறிஸ்தவத்தைப் பற்றிய விபரங்களின் ஒரு முக்கியமான ஆதாரமாகும். இதிலிருந்து, பித்தினியாவில் (Bithynia) இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை தேவனென்று ஆராதித்து, உயரிய ஒழுக்க மற்றும் நன்னெறி வரைமுறைகளை உடையவர்களாயிருந்து, கிறிஸ்துவை மறுதலிப்பதைவிட மரிக்கவும் ஆயத்தமாயிருந்தனர்; அதினால் கிறிஸ்தவம் எல்லா சமூகத்தினர் மற்றும் தரப்பினரிடமும், ரோமப் பிரஜைகள் உட்பட எல்லாரிடமும் அபரீத வளர்ச்சியடைந்தது, என அறிகிறோம்.

**கூடுதல் வரலாற்று ஆதாரங்கள் :**

இதைப்போன்ற கிறிஸ்துவைப் பற்றியும் கிறிஸ்தவத்தைப் பற்றியுமான குறிப்புகள் சமோசடாவை சேர்ந்த லூசியன் (Lucian of Samosata), மாரா பர்-செரபியன் (Mara Bar-Serapion), சியோடோனியஸ் (Suetonius), மற்றும் தாலஸ் (Thallas) ஆகியோரின் எழுத்துக்களிலும் காணப்படுகின்றன. ரோம பேரரசில் கிறிஸ்துவின் செல்வாக்கு இந்த வரலாற்று பதிவேடுகளில் தெளிவாகக் காணப்படுகிறது.

**வேதகாமம் - நம் ஆத்துமாவிற்கான கண்ணாடி**

தேவனுடைய பார்வையில்,
நாம் யாராக இருக்கிறோம்
என்பதை காண்பிக்கிறது.

---

தேவனுடைய கிருபையால்,
நாம் யாராக இருக்கலாம்
என்பதை காண்பிக்கிறது.

---

நியாயத்தீர்ப்பிலே, நாம்
யாராக இருப்போம் என்பதை
காண்பிக்கிறது.

## இம்மாதக் கேள்விகள்



1. குறித்த காலத்தில் கிறிஸ்து யாருக்காக மரித்தார்?
2. சபையாகிய சரீரத்திற்கு தலையானவர் யார்?
3. நீர் என்னை காண்கிற தேவன் என வாசிப்பதெங்கே?
4. இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் யார்?
5. எல்லார்மேலும், எல்லாரோடும், எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் யார்?
6. எது மனிதனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை?
7. தேவன் தமது ஆவியை யாருக்கு அளவில்லாமல் கொடுத்தார்?
8. கர்த்தருக்கு கடன் கொடுக்கிறவன் யார்?
9. கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்கள் யார்?
10. ஞானத்தின் ஆரம்பம் எது?



## சிறுவர்க்கான கேள்விகள்

குட்டீஸ்! கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில், ஆண்டவர் இயேசு ஊழியம் செய்த 10 பட்டணங்களின் பெயர்கள் உள்ளன; அவைகளை கண்டுபிடித்து அனுப்புங்கள்!

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | ப் | ப | ர் | ந | கூ | ம் | யா |
| ரி | ன் | ந | கூ | பெ | ம் | லே | ச |
| யா | நா | ச | ரே | த் | எ | ச | மா |
| எ | யீ | கோ | எ | சா | வு | ரு | ரி |
| ம் | ன் | ரி | பெ | யீ | மா | எ | பெ |
| ரி | த் | பெ | த் | தா | னி | யா | த் |
| கோ | சா | த் | ச | லே | எ | ரி | தா |
| மா | யீ | ல | நா | எ | ம் | மா | வு |
| ச | தா | கே | ன் | ரி | ரு | ச | னி |
| த் | ரே | ம் | யீ | கோ | ச | நா | யா |



அனுப்ப வேண்டிய முகவரி :

**திருமதி. பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி
மதுரை - 625 016 செல்: 92 4421 4421

### சென்ற மாத பதில்கள்

1. நீதி 15:8
2. தானி 9:13
3. மத் 5:44
4. நீதி 28 : 9
5. மத் 26:42;மாற்14:38; லூக்22:46
6. 1தெச 5 : 17
7. அப் 16 :25
8. லூக்கா 6:12
9. சங் 102:16
10. 1கொரி 11:13

### அக்டோபர் மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1) A.G. நிரல் ஜெஸ் – விழுப்புரம்
2) T. கிரேஸிலின் சிபியா – புதுக்கோட்டை
3) V. ஷைனி – மதுரை
4) V. ஷாலி – மதுரை
5) X. ஜோசுவா – மணப்பாறை
6) J. ஜெரால்டு பிரின்ஸ் – மணப்பாறை
7) J. பியூலா – மணப்பாறை
8) Miss. பவுலின் எட்வின் – மதுரை
9) I. ஸ்டீபன் பால் – விருதுநகர்
10) P. சாம் – மதுரை
11) P. ஜெபக்கனி – மதுரை
12) P. சௌந்திரபாண்டி – திருமங்கலம்
13) D. டேஃனி – சென்னை
14) D. ஜீனித்தா – சென்னை
15) R. சேம் – உக்கிரக்கோட்டை

### அக்டோபர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. மேரி ராஜ் – மதுரை
2. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
3. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
4. Mrs. A. சந்திரா – மதுரை
5. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
6. Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
7. R. பால் ஜெயராஜ் – சென்னை
8. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
9. Mrs. ஹெலன் திலக் – மதுரை
10. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
11. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
12. R. ஐசக் – விருதுநகர்
13. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
14. Mrs. குளோரி பால்ராஜ் – தஞ்சை
15. M. வசந்த கனேசரேத் – ஆம்பூர்
16. P. சூரியபிரியா – திருமங்கலம்
17. Mrs. அன்பு சுதந்திரம் – நெல்லை
18. Mrs. கிரேஸ் டேவி – மதுரை
19. A. வசந்தி எலிசபேத் – மதுரை
20. S.M. தவமணி தேவி – திருப்பூர்
21. R. விஜி பிரியங்கா – செட்டிபாளையம்
22. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
23. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
24. A. ஏசுநேசன் – புதுச்சேரி
25. G. பீட்டர் பால்ராஜ் – தூத்துக்குடி
26. V. மெர்ஸி – கோவை
27. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
28. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
29. Mrs. சிந்தனை மலர் – ஆம்பூர்
30. R. சங்கீதா – சென்னை
31. N. ஞானசுந்தரி நாகராஜன் – நெல்லை
32. M. புஸ்பராணி – நாமக்கல்
33. V. கண்ணம்மாள் – கோவை
34. Sis. லிசி ராஜசேகரி – மறைமலைநகர்
35. Y. ஜெயசுதா – சென்னை
36. Mrs. ஸ்டெல்லா சோபனா – பெங்களூர்
37. R. சரோஜா – நெல்லை
38. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
39. Mrs. மைதிலி காட்டர் – ஆம்பூர்
40. Mrs. கேற்றி செல்லத்துரை – சென்னை
41. Mrs. கௌசந் – திருப்பூர்
42. Mrs. ரூபி வசந்தா – மதுரை
43. 2ம் ஆண்டு மாணவர்கள் – செட்டிபாளையம்
44. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
45. Mrs. லோட்டஸ் பால்ராஜ் – கோவில்பட்டி
46. Mrs. ஞான சுந்தரி – கோவை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !